**ஜூன் – 12**

# TNPSC துளிகள்

- ❖ கர்நாடக மாநில அரசின் சாதாரணப் பேருந்துச் சேவைகளில் பெண்களுக்கு இலவசப் பயண வசதியினை வழங்கும் 'சக்தி' திட்டத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகளை அந்த மாநில அரசு வெளியிட்டுள்ளது.
- ❖ வடகிழக்குப் பிராந்தியத்தில் முதலாவதாக, அருணாச்சலப் பிரதேச மாநிலத்தின் மாவட்ட நல்லாட்சிக் குறியீடு சமீபத்தில் வெளியிடப்பட்டது.
    - ○ இது நிர்வாகச் சீர்திருத்தங்கள் மற்றும் பொதுமக்கள் குறைகள் துறை (DARPG) மற்றும் அருணாச்சலப் பிரதேச அரசு ஆகியவற்றினால் இணைந்து உருவாக்கப் பட்டுள்ளது.

# தேசியச் செய்திகள்


## பல்கலைக்கழக மானியக் குழுவின் விதிமுறைகள் - 2023




- ❖ 2023 ஆம் ஆண்டு பல்கலைக்கழக மானியக் குழுவின் (நிகர்நிலைப் பல்கலைக் கழகங்களாகக் கருதப்படும் கல்வி நிறுவனங்கள்) விதிமுறைகளானது சமீபத்தில் வெளியிடப் பட்டது.
- ❖ மேலும் உயர்தரத்தினை மையமாகக் கொண்ட நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களை நிறுவுவதற்கு இது வழி வகுக்கும்.
- ❖ 1956 ஆம் ஆண்டு பல்கலைக்கழக மானியக் குழுச் சட்டமானது, பல்கலைக்கழகங்கள் அல்லாத பிற கல்வி நிறுவனங்களுக்கு நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களாகக் கருதப் படும் கல்வி நிறுவனங்கள் என்ற அந்தஸ்தினை வழங்குவதற்கான அதிகாரத்தினை மத்திய அரசிற்கு வழங்குகிறது.
- ❖ முன்னதாக, இதற்கான விதிமுறைகள் தொகுப்பானது 2010 ஆம் ஆண்டில் வெளியிடப் பட்டு 2016 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளில் திருத்தப் பட்டன.

- இந்தியாவில் தற்போது சுமார் 170 நிகர்நிலைப் பல்கலைக் கழக நிறுவனங்கள் உள்ளன.


## நிலவுடைமைப் பாத்தியம் கோரல்




- கர்நாடக உயர்நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி ரிது ராஜ் அவாஸ்தி தலைமையில் சட்ட ஆணையமானது அமைக்கப்பட்டது.
- நிலவுடைமைப் பாத்தியம் கோரல் தொடர்பானச் சட்டத்தில் எந்த ஒரு மாற்றத்தையும் கொண்டு வருவதற்கு எந்த முகாந்திரமும் இல்லை என்று 22வது சட்ட ஆணையம் தனது சமீபத்திய அறிக்கையில் தெரிவித்துள்ளது.
- நிலவுடைமைப் பாத்தியம் கோரல் என்ற கருத்தானது ஒரு நிலத்தினைக் காலியாக விடக் கூடாது என்றும் அதற்கு மாறாக ஒரு முறையானப் பயன்பாட்டிற்குப் பயன்படுத்த வேண்டும் என்ற கருத்தாக்கத்தில் இருந்து தோன்றியது.
- நிலவுடைமைப் பாத்தியம் கோரல் என்பது "தொடர்ச்சியான, தடையின்றி மற்றும் ஒரு அமைதியான முறையிலான" நில உரிமைதாரருக்கு எதிரான ஒரு உரிமைக் கோரலாக இருக்க வேண்டும்.
- உள்நாட்டில் இந்த வரம்பு நிர்ணய சட்டத்தினைக் கொண்டு வருவதற்கான முதல் முயற்சியானது "1859 ஆம் ஆண்டு XIV சட்டம்" ஆகும்.
- இது பிரிட்டிஷ் இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட உரிமையியல் சார்ந்த வழக்குகளின் வரம்பினை ஒழுங்குமுறைப் படுத்தியது.

- 1963 ஆம் ஆண்டில் வரம்பு நிர்ணயச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு, நிலவுடைமைப் பாத்தியம் கோரல் பற்றிய சட்டம் குறிப்பிடத் தக்க மாற்றங்களுக்கு உட்படுத்தப் பட்டது.
- 1963 ஆம் ஆண்டு வரம்பு நிர்ணயச் சட்டத்தின் கீழ், 12 ஆண்டுகளுக்கும் மேலாக தனியார் நிலம் அல்லது 30 ஆண்டுகளுக்கு மேல் அரசு நிலம் வைத்திருக்கும் எந்தவொரு நபரும் அந்தச் சொத்தின் உரிமையாளராக முடியும்.

## தேசத் துரோக சட்ட அறிக்கை




- இந்தியாவின் 22வது சட்ட ஆணையமானது, இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 124Aவது பிரிவின் அரசியலமைப்பு சார்பு தன்மை மீதான ஒரு இறுதி அறிக்கையினை (தேசத் துரோகச் சட்டத்தின் பயன்பாடு) சமீபத்தில் சமர்ப்பித்தது.
- தேசத் துரோகத்தைக் குற்றவியல் சார்ந்த குற்றமாகக் கருதும் இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 124Aவது பிரிவினைத் தக்க வைக்க அந்த ஆணையம் பரிந்துரைத்துள்ளது.
- எனினும் தவறான பயன்பாடுகளுக்கு உள்ளாக வாய்ப்புள்ள இந்தச் சட்டப் பிரிவினைப் பாதுகாப்பதற்கும் திருத்துவதற்கும் அது அழைப்பு விடுத்துள்ளது.
- 124A சட்டப் பிரிவானது தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுப்பதற்காக, சில மாதிரி வழிகாட்டுதல்களை மத்திய அரசு கொண்டு வர வேண்டும் என்று அது கூறியுள்ளது.
- இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளப் பரிந்துரைகள் வலியுறுத்தல் சார்ந்தவை மற்றும் பிணைப்பு சார்ந்தவை அல்ல.

- இந்த ஆணையமானது, இந்தக் குற்றத்திற்கான தண்டனையாக அதிகபட்ச ஆயுட்காலம் அல்லது ஏழு ஆண்டுகள் அல்லது அபராதம் ஆகியவற்றை அந்த வழக்கைப் பொறுத்து விதிப்பதற்குப் பரிந்துரைத்தது.
- தற்போது, இந்தக் குற்றத்திற்கான தண்டனையானது அதிகபட்சமாக ஆயுள் தண்டனை அல்லது மூன்று ஆண்டுகள் அல்லது அபராதமாக விதிக்கப் படுகிறது.

### புதிய ஈர நிலம் மற்றும் சதுப்புநில வளங்காப்புத் திட்டம்




- உலகச் சுற்றுச்சூழல் தினத்தையொட்டி, நாட்டின் ஈர நிலங்கள் மற்றும் சதுப்பு நிலங்களுக்குப் புத்துயிர் அளிப்பதற்காக இரண்டு புதியத் திட்டங்கள் தொடங்கப் பட்டு உள்ளன.
- இந்தப் புதிய திட்டங்கள்: அம்ரித் தரோஹர் மற்றும் MISHTI (கரையோர வாழ்விடங்கள் மற்றும் நிலையான வருமானங்களுக்கான சதுப்பு நில முன்னெடுப்பு) ஆகியனவாகும்.
- அம்ரித் தரோஹர் யோஜனா, தற்போதுள்ள ராம்சார் தளங்களின் வளங்காப்பினைப் பொது மக்களின் பங்களிப்பு மூலம் உறுதி செய்யும்.
- MISHTI திட்டமானது, நாட்டில் உள்ள சதுப்புநில சுற்றுச்சூழல் அமைப்பினை புதுப்பிக்கச் செய்யவும் பாதுகாக்கவும் உதவும்.
- தெற்காசியாவின் சதுப்புநில எண்ணிக்கையில் இந்தியா 3 சதவீதத்தினைக் கொண்டு உள்ளது.

## பொருளாதாரச் செய்திகள்

### நிதி உள்ளடக்கக் கட்டுப்பாட்டகம்

- இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநர் சக்திகாந்த தாஸ் சமீபத்தில் ‘அந்தர்த்ரிஷ்டி’ என்ற பெயரிலான நிதி உள்ளடக்கக் கட்டுப்பாட்டகத்தினைத் தொடங்கி வைத்தார்.
- இந்தத் துறையுடன் தொடர்புடைய பல்வேறு அளவுருக்களைச் சேகரிப்பதன் மூலம் நிதி உள்ளடக்கத்தின் ஒரு முன்னேற்றத்தை மதிப்பிடச் செய்வதற்கும் கண்காணிப்பதற்கும் தேவையான நுண்ணறிவை இது வழங்கும்.

- இந்த வசதியானது நாடு முழுவதிலும் உள்ள சிறிய அளவிலான ஒரு நிதி ஒதுக்கீட்டின் அளவை மதிப்பிட்டு, அத்தகையப் பகுதிகளில் உள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண உதவும்.

भारतीय रिज़र्व बैंक
RESERVE BANK OF INDIA

## மாநிலச் செய்திகள்

### ஒட்டு மொத்தச் சுற்றுச்சூழல் செயல்திறன்




- அறிவியல் மற்றும் சுற்றுச்சூழலுக்கான லாப நோக்கற்ற மையமானது 'இந்தியாவின் சுற்றுச்சூழல் 2023: புள்ளிவிவரங்கள்' என்ற பெயரில் தனது வருடாந்திர அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- தெலுங்கானா மாநிலம் தனது காடுகளின் பரப்பளவினை அதிகரிப்பதிலும், நகராட்சிக் கழிவுகளைச் சுத்திகரிப்பதிலும் கண்ட அதன் பெரும் முன்னேற்றத்திற்காக வேண்டி முதலிடத்தில் உள்ளது.
- அதைத் தொடர்ந்து மத்தியப் பிரதேசம், டெல்லி மற்றும் குஜராத் ஆகியவை இடம் பெற்றுள்ளன.
- தெலுங்கானா அதன் பசுமைப் பரப்பளவினை 22 சதவீதத்தில் இருந்து 33 சதவீதமாக உயர்த்தியது.

- இந்த மாநிலத்தில் உள்ள புவியியல் பகுதியில் 24.06 சதவீதமானது காடுகளால் சூழப்பட்டுள்ளது.

## KFON இணைய இணைப்பு

- கேரள அரசானது, கேரள ஒளியிழை வலையமைப்பினை (KFON) அதிகாரப் பூர்வமாகத் தொடங்கியுள்ளது.
- KFON மூலம், இணைய உரிமையை ஒரு அடிப்படை உரிமையாக அறிவித்த முதலாவது மாநிலமாக கேரளா மாறியுள்ளது.
- அனைத்து வீடுகளுக்கும் அரசு அலுவலகங்களுக்குமான அதிவேக அகலப்பட்டை அலை வரிசை இணையச் சேவை அணுகலை உறுதி செய்வதன் மூலம் ஒரு பெரும் டிஜிட்டல் இடைவெளியினைக் குறைப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- முதன்மையாக KFON ஒரு உள்கட்டமைப்பு சேவை வழங்கும் அமைப்பாகச் செயல்படும்.




# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## கடற்படைத் தளபதி K.S. சுப்பிரமணியன்

- இந்தியக் கடற்படையின் முதல் நீர்மூழ்கிக் கப்பலின் கடற்படைத் தளபதி K.S. சுப்பிரமணியன் சமீபத்தில் காலமானார்.
- இந்தியக் கடற்படையின் முதல் நீர்மூழ்கிக் கப்பலான ஐஎன்எஸ் கல்வாரியின் (S23) தளபதியாக இவர் பணியாற்றினார்.

- 1967 ஆம் ஆண்டு டிசம்பர் 08 ஆம் தேதியன்று, லாட்வியாவின் ரிகாவில் உள்ள சோவியத் கடற்படைத் தளத்தில் ஐஎன்எஸ் கல்வாரி கடற்படையில் இணைக்கப் பட்டது.
- இந்த முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வானது, இந்தியக் கடற்படையின் நீர்மூழ்கிக் கப்பல் பிரிவின் தோற்றத்தினைக் குறித்தது.



# விளையாட்டுச் செய்திகள்

## 3வது கேலோ இந்தியா பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகள்

| RANKING | UNIVERSITY | Gold (1) | Silver (2) | Bronze (3) | TOTAL |
|---|---|---|---|---|---|
| | Grand Total | 262 | 263 | 297 | 822 |
| 1 | Panjab University, (PB) | 26 | 17 | 26 | 69 |
| 2 | Guru Nanak Dev University, Amritsar | 24 | 27 | 17 | 68 |
| 3 | Jain University, Karnataka | 16 | 10 | 6 | 32 |
| 4 | Punjabi University, Patiala (PB) | 12 | 14 | 8 | 34 |
| 5 | Guru Kashi University | 9 | 10 | 9 | 28 |
| 6 | Kurukshetra University, (Haryana) | 8 | 11 | 9 | 28 |

- 2023 ஆம் ஆண்டு கேலோ இந்தியா பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகள் ஆனது உத்தரப் பிரதேசத்தில் வாரணாசியின் இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் நிறைவடைந்தது.
- பஞ்சாப் பல்கலைக்கழக அணியானது 26 தங்கம், 17 வெள்ளி மற்றும் 26 வெண்கலப் பதக்கங்களுடன் (மொத்தம் - 69 பதக்கங்கள்) பதக்கப் பட்டியலில் முதலிடம் பிடித்தது.

- அமிர்தசரஸ் குருநானக் தேவ் பல்கலைக்கழக அணியானது, இந்த ஒட்டு மொத்தச் சாம்பியன்ஷிப் போட்டியில் 24 தங்கம், 27 வெள்ளி மற்றும் 17 வெண்கலத்துடன் (மொத்தம் 68 பதக்கங்கள்) இரண்டாவது இடத்தைப் பிடித்தது.
- கடந்த ஆண்டு போட்டிகளின் சாம்பியனான கர்நாடகாவின் ஜெயின் பல்கலைக் கழக அணியானது, 32 பதக்கங்களுடன் மூன்றாவது இடத்தைப் பிடித்தது.
- நீச்சல் வீரர் சிவா ஸ்ரீதர் ஆடவர் பிரிவில் எட்டு தங்கம் உட்பட மொத்தம் 11 பதக்கங்களுடன் முதலிடம் பிடித்தார்.
- ஷ்ருங்கி பாண்டேகர் மகளிர் பிரிவில் ஐந்து தங்கம் உட்பட ஒன்பது பதக்கங்களை வென்றார்.
- தமிழ்நாட்டின் சென்னைப் பல்கலைக் கழக அணியானது 7 தங்கம், 8 வெள்ளி மற்றும் 8 வெண்கலப் பதக்கங்களுடன் பட்டியலில் 9வது இடத்தைப் பெற்றுள்ளது.
- மற்ற தமிழகப் பல்கலைக்கழகங்கள்: SRM பல்கலைக் கழகம் (37), பாரதியார் பல்கலைக் கழகம் (42) மற்றும் மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் (85) ஆகியவை இப்பட்டியலில் இடம் பெற்றுள்ளன.

# முக்கிய தினங்கள்

## உலக அங்கீகாரத் தினம் 2023 - ஜூன் 09




- இது பல்வேறு துறைகளில் அங்கீகார வழங்கீட்டின் பங்கினை அங்கீகரித்து அதனை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- தொழில் துறைகளில் போட்டித் திறன், சார்புநிலை மற்றும் நம்பகத்தன்மையை உறுதி செய்வதில் அங்கீகாரத்தின் மதிப்பு மற்றும் நன்மைகள் பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சர்வதேச ஆய்வக அங்கீகாரக் கூட்டமைப்பு (ILAC) மற்றும் சர்வதேச அங்கீகார மன்றம் (IAF) ஆகியவற்றின் ஒரு கூட்டு முயற்சியின் விளைவாக 2007 ஆம் ஆண்டில் இந்த நாள் நடைமுறைக்கு வந்தது.

- 2023 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "அங்கீகாரம்: உலகளாவிய வர்த்தகத்தின் எதிர்காலத்தை ஆதரித்தல்" என்பதாகும்.

## இதரச் செய்திகள்

### வெப்பக் குறியீட்டு அடிப்படையிலான காப்பீட்டுத் திட்டம்

- இந்தியாவின் ஒரு முன்னணி தனியார் பால்பொருட்கள் நிறுவனமான கர்நாடகாவின் mooMark, பால் பண்ணையாளர்களுக்கு வெப்பக் குறியீட்டு அடிப்படையிலான காப்பீட்டு வசதியினை வழங்கும் முதல் நிறுவனம் ஆகும்.
- சுட்டெரிக்கும் கோடை மாதங்களில் பால் விற்பனை குறைவதால் ஏற்படும் வருமான இழப்பிலிருந்து பால் பண்ணையாளர்களை பாதுகாக்கச் செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- வெப்ப அலைகளின் போது பால் உற்பத்தி குறைவதால் ஏற்படும் வருவாய் இழப்புக்குப் பால் பண்ணையாளர்களுக்கு இதன் மூலம் நிதி இழப்பீடு வழங்கப்படும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★